★சுபகிருது வருடம் ஆணி மாதம் 2ம் நாள். வியாழக்கிழமை. தேய்பிறை.
இ ★திதி : துவிதியை காலை 9.45 மணி வரை; அதன்பிறகு திருதியை.
ந் ★நட்சத்திரம் : பூராடம் பகல் 12.36 மணி வரை; அதன் பிறகு உத்திராடம் .
த ★யோகம் : சித்த யோகம். ★சந்திராஷ்டமம் : ரோகிணி, மிருகசீரிடம்.
நா ★நல்ல நேரம் : காலை 10.30 - 11.30 மணி வரை.
ள் ★ராகு காலம் : மதியம் 1.30 - 3.00 மணி வரை. ★எமகண்டம் : மாலை 6.00 - 7.30 மணி வரை ★சூலம் : தெற்கு: பரிகாரம்: தைலம்.

ஊட்டி செய்திகள்

தினகரன் 16.6.2022 • Kovai

முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின பேரணி

▶ முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு ஊட்டியில் விழிப்புணர்வு மனித சங்கிலி மற்றும் பேரணி நடந்தது.

ஊட்டி, ஜூன் 16: முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு ஊட்டியில் விழிப்புணர்வு மனித சங்கிலி மற்றும் பேரணி நடந்தது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு மனித சங்கிலி மற்றும் பேரணி ஊட்டி சேரிங்கிராஸ் பகுதியில் நடந்தது. மாவட்ட கலெக்டர் அம்ரித் முன்னிலை வகித்தார்.

வனத்துறை அமைச்சர் ராமசந்திரன் தலைமை வகித்து துவக்கி வைத்து பேசுகையில்,"முதியோர்களை குடும்பத்தில் நல்ல முறையில் அரவனைப்போடு பராமரிக்க வேண்டும். மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் காயப்படுத்தும் தகாத வார்த்தைகளை உபயோகிக்க கூடாது. அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். பொது இடங்களான மருத்துவமனை, வங்கி, பஸ் போன்ற இடங்களில் முதியோர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு எதிரான கொடுஞ்செயல்கள், வன்முறைகள் இழைக்கப்படுவதை தடுத்திட வேண்டும்" என்றார்.

சேரிங்கிராஸ் பகுதியில் துவங்கிய பேரணி பழைய டிபிஒ சந்திப்பு வழியாக கலெக்டர் அலுவலகத்தில் நிறைவடைந்தது. இதில் பங்கேற்ற முதியோர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர். முன்னதாக உறுதி மொழி ஏற்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட எஸ்பி ஆஷிஷ் ராவத், மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்ஷினி, ஊட்டி நகராட்சி தலைவர் வாணீஸ்வரி, துணை தலைவர் ரவிக்குமார், நகராட்சி ஆணையர் காந்திராஜன், சமூக பாதுகாப்பு அலுவலர் பிரவீணா, குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஷோபனா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டியில் சாரல் மழை குளிரால் மக்கள் அவதி

ஊட்டி, ஜூன் 16: நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன் மாதம் துவங்கி 3 மாதங்கள் தென்மேற்கு பருவமழை பெய்யும். இச்சமயங்களில் எந்நேரமும் மேக மூட்டம் மற்றும் சாரல் மழை பெய்யும். இதனால், அன்றாட பணிகளை கூட பொதுமக்கள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். ஆனால், இம்முறை கடந்த ஏப்ரல் மாதம் இறுதி வாரம் முதல் ஊட்டியில் தினமும் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம் கனமழை பெய்யும். பின் வழக்கம் போல், வெயில் காணப்படும். இதனால், குளிர் காணப்படவில்லை.

இந்நிலையில், நேற்று காலை முதல் ஊட்டியில் மேக மூட்டம் காணப்பட்டது. பிற்பகலுக்கு மேல் சாரல் மழை பெய்யத்துவங்கியது. இந்த சாரல் மழை வெகு நேரம் நீடித்தது. இதனால், ஊட்டியில் நேற்று பிற்பகலுக்கு மேல் குளிர் அதிகமாக உணரப்பட்டது.

ஜான் சல்லிவன் பிறந்த நாள் விழா

மாலை அணிவித்து அமைச்சர் மரியாதை

ஊட்டி, ஜூன் 16: ஜான் சல்லிவனின் 234வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது சிலைக்கு வனத்துறை அமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

200 ஆண்டுக்கு முன்பு ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லிவனின் 234வது பிறந்த நாளை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட கலெக்டர் அம்ரித் முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் பேசியதாவது:

ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லிவன் ஜூன் மாதம் 15ம் தேதி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் பிறந்தார். இவர், கடந்த 1815 முதல் 1830 வரை கோவை மாவட்ட கலெக்டராக பணிபுரிந்தார்.

இயற்கை சுற்றுச்சூழலில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இவரின் முயற்சியாலேயே ஊட்டி ஏரி உருவாக்கப்பட்டது. ஜான் சல்லிவனை நினைவுகூரும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா செல்லும் சாலையில் உள்ள சிறிய பூங்காவில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் 2 அடி உயரத்தில் மார்பளவு வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த மாதம் திறந்து வைத்தார். ஜான் சல்லிவனின் 234வது பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் நேற்று அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனை தொடர்ந்து, கோத்தகிரி கன்னேரிமுக்கு பகுதியில் உள்ள ஜான் சல்லிவன் திருவுருவ சிலைக்கு மாவட்ட கலெக்டர் அம்ரித் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில், எஸ்பி ஆஷிஸ் ராவத், குன்னூர் உதவி கலெக்டர் தீபனா விஸ்வேஸ்வரி, ஊட்டி நகர்மன்ற தலைவர் வாணீஸ்வரி, நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) இப்ராகிம்ஷா, ஊட்டி நகராட்சி ஆணையாளர் காந்திராஜா, கோத்தகிரி பேரூராட்சி தலைவர் ஜெயக்குமாரி, ஊட்டி நகராட்சி கவுன்சிலர்கள் முஸ்தபா, ஜார்ஜ், ரஜினி காந்த் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

▶ ஜான் சல்லிவனின் பிறந்தநாளை முன்னிட்டு ஊட்டியில் உள்ள அவரது சிலைக்கு வனத்துறை அமைச்சர் ராமசந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கலெக்டர் அம்ரித் உள்ளிட்டோர் உள்ளனர்.

காட்டு யானை தாக்கி பெண் படுகாயம்

ஊட்டி, ஜூன் 16: நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட மசினகுடி, மாவனல்லா பகுதியை சேர்ந்தவர் பொன்னுசாமி. இவரது மனைவி மங்கிலி (30). இவர், வாழைத்தோட்டம் அருகே சடாபட்டி பகுதியில் உள்ள ஒரு தனியார் பங்களாவில் வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று காலை மங்கிலி பங்களாவிற்கு வேலைக்கு சென்றுள்ளார். அப்போது, புதர் மறைவில் இருந்த காட்டு யானை மங்கிலியை தாக்கியுள்ளது. இதில், அவர் படுகாயமடைந்து சத்தம் போட்டுள்ளார். அவரது அலறல் சத்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் யானையை விரட்டியுள்ளனர். தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த வனத்துறையினர், மங்கிலியை மீட்டு ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஊட்டி நகரில் உலா வந்த காட்டுமாடு

▶ ஊட்டி நகரில் நேற்று முன்தினம் இரவு உலா வந்த காட்டுமாடுகள்.

வாகன ஓட்டிகள் பீதி

ஊட்டி, ஜூன் 16: ஊட்டி நகரில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருந்த சமயத்தில் காட்டுமாடுகள் கூட்டம் உலா வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஊட்டி ஏடிசி., மணி கூண்டு வழியாக நேற்று முன்தினம் இரவு 10க்கும் மேற்பட்ட காட்டுமாடுகள் குட்டிகளுடன் ஊட்டி நகருக்குள் புகுந்தது. அந்த சமயத்தில் மழை பெய்த நிலையில் வாகன போக்குவரத்தும் அதிகமாக இருந்தது. இதனால், வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் அச்சமடைந்தனர்.

வாகனங்களை கண்ட காட்டுமாடுகள் மார்க்கெட் சாலை, கமர்சியல் சாலையில் மிரண்டு ஓடின. பின்னர், கேசினோ சந்திப்பு பகுதியில் இருந்து டிபிஒ., சந்திப்பு வழியாக சென்ற காட்டுமாடுகள் கூட்டம் அருகில் உள்ள வனத்திற்குள் ஓடி மறைந்தது.

பாலக்காடு ரயில் நிலையத்தில்

4 கிலோ கஞ்சா கடத்திய வாலிபர் கைது

பாலக்காடு, ஜூன் 16: பாலக்காடு ரயில்வே சந்திப்பில் 4 கிலோ கஞ்சா கடத்திய காசர்கோடு வாலிபர் கைது.

பாலக்காடு சந்திப்பு ரயில் நிலையத்தில் ரயில் பயணிகளின் உடமைகளை ரயில்வே போலீசார் சோதனை நடத்தினர்.

இருந்துள்ளனர். அப்போது 3வது பிளாட்பாமில் சந்தேகப்படும்படி ஒரு வாலிபர் நின்றார். அவரது உடமைகளை சோதனை செய்போது 4 கிலோ கஞ்சா இருப்பது தெரியவந்தது.

விசாரணையில் அவர் காசர்கோட்டை சேர்ந்த ஜிஷ்ணு என்பதும், ஆந்திராவில் இருந்து கஞ்சா கடத்தி காசர்கோடு, கோழிக்கோடு ஆகிய மாவட்டங்களில் விற்பனை செய்ததும் தெரிய வந்தது. இதனையடுத்து போலீசார் ஜிஷ்ணுவை கைது செய்து அவரிடம் இருந்த கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

திமுக மகளிர் அணி சார்பில்

திராவிட மாடல் பயிற்சி பாசறை நடத்த முடிவு

▶ ஊட்டியில் நேற்று நடந்த மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் முபாரக் பேசினார். இதில், வனத்துறை அமைச்சர் ராமசந்திரன் உள்ளிட்டோர் உள்ளனர்.

ஊட்டி, ஜூன் 16: நீலகிரி மாவட்ட திமுக மகளிர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டம் ஊட்டியில் நடந்தது.

மாவட்ட செயலாளர் முபாரக் தலைமை வகித்தார். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், கோத்தகிரி பேரூராட்சி தலைவர் ஜெயகுமாரி வரவேற்றார். வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிப்பிற்கிணங்க, நீலகிரி மாவட்டத்திலும் மகளிர் அணி சார்பில், திராவிட மாடல் பயிற்சி பாசறை நிகழ்ச்சிகள் மாவட்டம் முழுவதும் சிறப்புடன் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில், மாவட்ட அவை தலைவர் பில்லன், மாவட்டதுணை செயலாளர்கள் ரவிகுமார், விஜயா மணிகண்டன், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முஸ்தபா, இளங்கோவன், எக்ஸ்போ செந்தில், ராஜூ, மாவட்ட ஊராட்சி தலைவர் பொன்தோஸ், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், பாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, தொரை, பரமசிவன், பிரேம்குமார், நெல்லை கண்ணன், உதயதேவன், ராஜேந்திரன், சிவானந்தராஜா, சுஜேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத்துல்லா, செல்வம், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, ஷீலா கேத்ரின், பரிமளா, சிவகாமி, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சுனிதா, கீர்த்தனா, பேரூராட்சி தலைவர்கள் கௌரி, ஹேமமாலினி, பேபி, ராதா, வள்ளி, சித்ரா தேவி உட்பட அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, நகர, ஒன்றிய மகளிர் அணி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

முடிவில், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் கீதா நன்றி கூறினார்.

சூட்டிங்மட்டம் பகுதியில்

ராட்சத மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு

▶ ஊட்டி - கூடலூர் சாலையில் சூட்டிங்மட்டம் பகுதியில் சாலையின் குறுக்கே மரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஊட்டி, ஜூன் 16: ஊட்டி சூட்டிங்மட்டம் பகுதியில் நேற்று காலை ராட்சத மரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஊட்டி, நடுவட்டம், கூடலூர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாகவே கனமழை பெய்து வருகிறது. இதனால், மண்ணில் ஈரத்தன்மை அதிகரித்துள்ளது. இந்நிலையில், நேற்று காலை ஊட்டி-கூடலூர் சாலையில் சூட்டிங்மட்டம் பகுதியில் சாலையின் குறுக்காக பழமையான ராட்சத கற்பூர மரம் விழுந்தது. இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. காலை நேரம் என்பதால் சாலையின் இருபுறமும் அரசு பஸ்கள், லாரிகள் மற்றும் தனியார் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. தொடர்ந்து வாகன ஓட்டுநர்கள், பொதுமக்கள் இணைத்து கற்பூர மரத்தை அகற்றி போக்குவரத்தை சீரமைத்தனர்.

பீட்ரூட் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஊட்டி, ஜூன் 16: பீட்ரூட் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தப்படியாக மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. பெரும்பாலான விவசாயிகள் கேரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட், முட்டைகோஸ், முள்ளங்கி, பீன்ஸ் உட்பட பல்வேறு மலை காய்கறிகளை பயிர் செய்து வருகின்றனர். தற்போது அதிகளவு கேரட், பீட்ரூட் மற்றும் உருளைக்கிழங்கு விவசாயம் செய்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் மேட்டுப்பாளையம், சென்னை, திருச்சி மற்றும் திருநெல்வேலி போன்ற பகுதிகளில் உள்ள காய்கறி மண்டிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல், வெளி மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. இதனால், எப்போதும் நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மலை காய்கறிகளுக்கு ஓரளவு விலை கிடைக்கும். இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பீட்ரூட் விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் வரை கிலோ ஒன்றுக்கு ரூ.25 முதல் ரூ.30 வரையே கிடைத்து வந்தது. ஆனால், தற்போது விலை படிப்படியாக உயர்ந்து தற்போது கிலோ ஒன்று ரூ.40 முதல் ரூ.45 வரை சென்னை மற்றும் மேட்டுப்பாளையம் போன்ற மண்டிகளில் விற்பனையாவதாக கூறப்படுகிறது. இதனால், நீலகிரி மாவட்டத்தில் பீட்ரூட் பயிரிட்ட விவசாயிகள் தற்போது அறுவடையிலும் மும்முரம் காட்டி வருகின்றனர். பீட்ரூட் விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கும் விலையில், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ORIGINAL LAND / PROPERTY DOCUMENT LOSED

I Mr.Chandran Aadhaar card Number 2846 5314 8463 S/o. Shandhu aged about 75 Years residing at Door No.21/152, KK Nagar, Athikunna Nelliyalam Village, Pandalur TK, The Nilgiri District do here by informed to the general publics that I have losed the original land document pertaining to me property registered in document No.906/2003 dated 05.08.2003 Registered at Gudalur Sub Registrar Office Gudalur. If any finds the said document please contact me over my advocate N.Sivasubramaniam Cell No.9443101321 or at the following residential address (Door No.21/152, KK Nagar, Athikunna Nelliyalam Village, Pandalur Tk, The Nilgiri District)

அசல் நீலம் / சொத்து ஆவணம் காணவில்லை

க.எண்.21/152, கே.கே.நகர் அத்திகுன்னா அஞ்சல், நெல்லியாளம் கிராமம், பந்தலூர் வட்டம், நீலகிரி மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு.சாந்து அவர்களின் மகன் சந்திரன் ஆதார் அட்டை எண்.2846 5314 8463 சுமார் 75 வயதுடைய நான் இதன்மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் கூடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல ஆவணம் எண். 906/2003 தேதி 05.08.2003 தொலைந்து விட்டது யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது வழக்குரைஞர் N.சிவசுப்பிரமணியம் தொடர்பு கைபேசி 94431 01321 எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

க.எண்.21/152, கே.கே.நகர் அத்திகுன்னா அஞ்சல், நெல்லியாளம் கிராமம். பந்தலூர் வட்டம் நீலகிரி மாவட்டம்

சந்திரன், த/பெ.சாந்து

க.எண்.21/152, கே.கே.நகர், அத்திகுன்னா அஞ்சல், நெல்லியாளம் கிராமம், பந்தலூர் வட்டம், நீலகிரி மாவட்டம்

ICICI Home Finance

கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை-400059, இந்தியா
கிளை அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601

[விதி 8(6) விதிகளை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதியுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்டஉரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலத் தேதி & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	B அன்பழகன் (கடன்தாரர்) கோமதி A (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000857730	மனை எண் 18, SF எண் 97/1A & 97/1B1, இலட்சுமி நகர், பல்லடம் சாலை தொலைவு, காரைப்புதூர் கிராமம் & ஊராட்சி, பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.	₹37,94,401/- (7 ஜூன், 2022 தேதியின்று)	₹ 35,45,831/- / ₹ 3,54,583/-	28 ஜூன், 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	30 ஜூன், 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை
2.	இலட்சுமணன் M (கடன்தாரர்) ரேவதி L (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000875044/ NHTIR00000875042	கதவு எண் 30, டி.எஸ். எண் 4/81, பிள்ளையார் கோவில் தெரு, கல்லம்பாளையம், திருப்பூர் வட்டம், மாநகராட்சி, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 641602	₹34,39,143/- (7 ஜூன், 2022 தேதியின்று)	₹ 28,43,287/- / ₹ 2,84,329/-	28 ஜூன், 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	30 ஜூன், 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்சன் டைரக் இணையதளத்தில் (URL இணைப்பு-https://sarfaesi.auctiontiger.net/EPROC/) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **29 ஜூன், 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601** இடத்தில் **29 ஜூன், 2022 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601** இடத்தில் **29 ஜூன், 2022 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **திருப்பூரில்** மாற்றத்தக்க வகையில் **"ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்-ஏலம்"** என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடை 7021072869** இல் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, **காண்க https://www.icicihfc.com/**

நாள்: ஜூன் 16, 2022 — அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: திருப்பூர் — ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்